தாயர் வளம்

காரைக்குடி கம்பன் திருநாளில்

புதுவைப் புலவர் அ. அருணகிரி அவர்கள்

22—3—1978 புதன்கிழமை மாலையில்

ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்

கம்பன் கழகம், காரைக்குடி.

தாயர் வளம்

புதுவைப் புலவர் அ. அருணகிரி அவர்கள்

கம்பன் கழகம், காரைக்குடி.

முன்னுரை

1957-ஆம் ஆண்டு, பங்குனி மாதம் தேவகோட்டையிலுள்ள என் நண்பர், மெ ராம அ. இராமனுதன் செட்டியார் வீட்டுக்குப் போயிருந்தேன். நான் சென்ற மறுநாள், அவர்கள் காரைக்குடி கல்லுக்கட்டிக் கடைத் தெருவில் சாமான்கள் வாங்குவதற்கு வந்தார்கள். புதிய ஊரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையால் நானும் அவர்களோடுபுறப்பட்டுவிட்டேன்.

கடைத் தெருவில் கடைக்குக் கடை ஏறி இறங்கி அலைகின்ற அவர்களோடு என்னுல் அலைய முடியவில்லை. எங்கேயாவது ஓரிடத்தில் இருக்கிறேன், ஊருக்குத் திரும்பும் போது அழைத்துச் செல்லுங்கள் என்றேன். "மீனாட்சி உயர்நிலைப் பள்ளியில் கம்பன் திருநாள் நடக்கிறது; அங்கே சென்று கேட்டுக்கொண்டிருங்கள்; மாலையில் வந்து அழைத்துச் செல்கிறோம்" என்றார்கள். சென்றேன்; அவ்வளவுதான்; கம்பனுல் நான் கவரப்பெற்றேன். மாலையில் என் நண்பர்கள் வந்து தேவகோட்டைக்குச் செல்ல அழைத்தார்கள்; விழா முடிந்து வருவதாகச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டேன்.

மூன்று நாட்கள் கம்பன் திருநாள் பந்தலில்முகாமிட்டேன். அப்போது, பந்தலில் வரிசையாக நடப்பெற்ற தூண்களில் மூன்றாவது தூண்தான் எனக்குத் துணை. தூணில் சாய்ந்த வண்ணம் சொற்பொழிவுகளைக் கேட்பது; நோட்டுப் புத்தகத்தில் குறிப்பெடுத்துக்கொள்வது; ஏதேனும் ஒரு உணவு விடுதியில் சென்று சாப்பிடுவது; மீண்டும் வந்து

பந்தலிலேயே படுத்துக்கொள்வது; இப்படியே மூன்று நாள் விழாப் பேச்சுகளையும் கேட்டு இன்புற்றேன். 1957 முதல் ஆண்டு தோறும் கம்பன் திருநாளுக்குச் சென்றுவருவது பிரார்த்தனையாகிவிட்டது. அப்போதெல்லாம், காரைக்குடிக் கம்பன் கழகச் செயலாளர், திருவாளர் சா. கணேசன் அவர்களை எனக்குத் தெரியுமேயொழிய அவருக்கு என்னைத் தெரியாது

1965ல், புதுவை மாநிலத் தலைமை நீதிபதியாக உயர்திரு எஸ் மகராஜன் அவர்கள் பதவியேற்றார்கள் கம்பன் திருநாள் நிகழ்ச்சிகளை. ஒன்பது ஆண்டுகளாகக்குறிப்பெடுத்த சுவடிகளோடு ஒரு நாள் அவர் வீட்டுக்குத் துணிந்து சென்றேன்; என்னை நானே அறிமுகப்படுத்திக்கொண்டேன்; காரைக்குடியில் அவர் பேசிய பேச்சுக்களை அப்படி அப்படியே பேசிக்காட்டினேன்; ஆச்சரியப்பட்ட அவர் அன்பினால் என்னை அணைத்துக்கொண்டார். புதுவையில் கம்பன் விழா நடத்த வேண்டுமென்ற என்னுடைய ஆசையையும் பேச்சோடு பேச்சாக அவரிடம் அவிழ்த்துவிட்டேன். நீதிபதி அவர்கள் என் விருப்பத்தை வரவேற்றார்கள்; வாழ்த்தினார்கள்.

1966ல் புதுவை மாநில முதலமைச்சராகப் பதவியிலிருந்த தகைமிகு. வை. வெங்கடசுப்பாரெட்டியார் தலைமையில் "கம்பன் விழாக்குழு" அமைந்தது. குழுவின் செயலாளர் என் நண்பர் புரவலர் ந. கோவிந்தசாமி அவர்கள். 1966 மே இரண்டாவது வாரத்தில் புதுவையில் கம்பன் விழா ஜாம்ஜாம் என்று நடக்கத்தொடங்கிவிட்டது. விழாவின் பட்டிமண்டபத்தில் என்னையும் ஒரு துணைப் பேச்சாளனாக இணைத்துக் கொண்டேன். பட்டிமண்டபத்தில் ஏதோ உளறினேன். சா. கணேசன் அவர்களும் சகிப்புத்தன்மையோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

1967 கம்பன் திருநாள் நிகழ்ச்சியின் நான்காவது நாளில் நாட்டரசன்கோட்டை கம்பன் சமாதியில் என்னையும் போட்டார்கள். ''பொய்யில் உள்ளத்தன்'' என்ற தலைப்பில் குகனைப்பற்றிப் பேசினேன் என்று சொல்லமாட்டேன்; கம்பன் என்னைப் பேசவைத்தான். பேச்சு முடிந்ததும் எல்லோரும் என்னை வாழ்த்தினார்கள். குகனை இராமன் சகோதரனாக ஏற்றுக்கொண்டதுபோல, சா. கணேசன் அவர்களும் என்னைத் தம்பியாக ஏற்றுக்கொண்டார்கள். அன்றுமுதல் அவர் குடும்பத்திலே நான் இளையவன்; என் குடும்பத்திற்கு அவர் மூத்தவர். அன்றுமுதல் இன்றுவரை ஆண்டுதோறும் கம்பன் திருநாள் நிகழ்ச்சிகளில் இடம் பெறுகிறேன்; பேசுகிறேன்; அத்தனைப் பேச்சுக்களும் காற்றிலே பறந்து விட்டன.

இந்த ஆண்டுத் திருநாளில் எனக்குக்கிடைத்த தலைப்பு ''தாயர் வளம்'' தாயர் வளம்பற்றிக் குறிப்பெடுத்து எழுதி வைத்திருந்த சுவடியை, என் மகள் திருமதி. **அழகரசி பரசுராமன்** B. SC., B. Ed என் சொல்லை மீறி அவளுடைய வழிபாட்டுத் தந்தை கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு நூல்வடிவாக்கி வெளியிடும்படி அனுப்பிவிட்டாள். நான் என்ன செய்வது?

இந்நூலில் உள்ள குறைகளுக்கு என் மகளும், என் அண்ணன் கம்பன் அடிப்பொடி அவர்களுமே பொறுப்பு.

இந்தச் சிறுநூலை, கம்பன் அடிப்பொடி அவர்களின் பாதகமலங்களில் படைக்கிறேன்.

இவண்,

அ. அருணகிரி.

பதிப்புரை

40-ஆவது ஆண்டுக் கம்பன் திருநாளின், முதல் நாள் பேரவை 'வீட்டு வளம்' ஆகும். அதில் 'தாயர் வளம்' பற்றிப் பேசவேண்டும் என்று, புதுவைப் புலவர் அ. அருணகிரி அவர்களைக் கேட்டுக்கொண்டோம். அன்புடன் இசைந்த அவர், தமது பேச்சின் சுருக்கத்தை எழுத்துரையாகவும் அனுப்பிவிட்டார். மகிழ்ச்சி; நன்றி!

சகோதரர் அருணகிரியார் ஒரு தமிழ்ப் புலவர் மட்டுமல்லர்; நல்ல ஒரு தமிழ்த் தொண்டருமாவார். கம்பன் பணிக் கென்றே தம்மை ஆட்படுத்திக்கொண்ட மிகச் சிலருள் இவர் ஒருவர்.

இவருக்குக் கம்பன்மாட்டுள்ள ஈடுபாட்டுச் சிறப்பையும், அவன் காப்பியத்தில் உள்ள ஆழ்ந்த பயிற்சியையும் இந்த எழுத்துரையில் மிளிரக் காணலாம். இவர் விருப்பத்திற் கேற்ப இது புத்தகமாகி வெளிவருகிறது.

இத்தகைய ஆய்வுரைகள் பலவற்றை இவர் உபகரிக்க வேண்டும்! எந்தைபிரான் கம்பனும், அவன் குறிகளாசுற் காட்டிட முயலும் முழுமுதற் பரம்பொருளும் இவர் முயற்சிக்கு அருள்புரிவராக!

அன்பன்,
கம்பன் அடிப்பொடி.
செயலாளன்.

கம்பன் கழகம்,
காரைக்குடி,
22—3—1978

தாயர் வளம்

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
நின் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

தாய்தன்னை அறியாத கன்றுஇல்லை; தன்கன்றை
ஆயும் அறியும்; உலகின்தாய் ஆகின், ஐய!
நீ அறிதி எப்பொருளும்; அவை உன்னை நிலையறியா;
மாயைஇது என்கொலோ? வாராதே வரவல்லாய்!

பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!
சகோதர சகோதரிகளே!
எல்லோருக்கும் என் வணக்கம்.

இன்றைய வீட்டு வளத்திலே பெண்பாலுக்கே உரிய வளங்கள் இரண்டு. ஒன்று தாயர் வளம்; மற்றொன்று மனை வளம். மற்றைய வளங்களினும் தலையாயது "தாயர் வளம்" ஆகிய காரணத்தால், தாயர் வளத்தை முன்னே நிறுத்தினர்கள் என்று கருதுகிறேன். முன்னே நிற்கும் தாயர்வளத்தைப் பேசுவதற்கு என்னை ஏன் நிறுத்தினர்கள் என்பது புரியவில்லை. எப்படியோ எனக்குக் கிடைத்தது தாயர் வளம். தாயர்வளத்தை நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, உருகுகிறேன்.

ஒருவன் ஒருத்தியைக் காதலித்தான் "நான் உன்னைக் காதலிக்க வேண்டுமானல், நீ உன் தாயைக்கொன்று அவளுடைய இதயத்தை எனக்குக் காதல் பரிசாகத் தர வேண்டும்", என்று கேட்டாள் அந்தக் கன்னி. "இவ்வளவு தானு" என்று அவன் உடனே ஓடிச்சென்று, தன் தாயைக் கொன்று, துடிக்கத்துடிக்க இதயத்தைத் தூக்கிக் கொண்டு

ஓடிவந்தான். வழியிலே ஒரு மரத்தின் வேர் தடுக்கிக் கீழே விழுந்தான். அவனுடைய கையிலேயிருந்து தவறிவிழுந்து துடிக்கின்ற இதயம் அவனைநோக்கிக் கேட்டது. "மகனே! பார்த்து வரக்கூடாதா?" என்று. ஆங்கிலக் கவிஞன் Words Worth இவ்வாறு பாடினானும்.

மூன்று புவனத்து உள்ளபொருள் முற்றும் கொடுத்து முறை முறையே, ஏன்ற வழிபாடு இயற்றிடினும், அன்னை ஒருநாள் வளர்த்தாளே அதற்கு ஈடாகுமா? பால்நினைந்து ஊட்டும் தாயரின் வளத்தை, அவர்களின் அன்பினை, பரிவினை, அருளினை, அவற்றின் ஆழத்தை, அகலத்தை, ஆற்றலை, முப்பது நிமிடங்களில் முடக்கிப் பேசி முடிக்க முடியுமா? என்று திணறுகிறேன், திண்டாடுகிறேன், திகைத்து நின்று தத்தளிக்கிறேன்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், "தாய்மை வளம் நிறைந்ததுதான் கம்பன் காவியம்" என்று கூறிவிடலாம். தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் தாய்மை நலம் சொட்டச் சொட்டப் பாடியவன் கம்பன்.

கம்பன், காப்பியத் தலைவனாகிய இராமனைத் ''தாய் என உயிர்க்கு நல்கித் தருமமும், தகவும், சால்பும், தான் என நின்றவள்'' என்று பாராட்டுவான். காப்பியத் தலைவியாகிய சீதையைத் ''தாய்தெரிந்து உலகு காத்த தவத்தி என்று சீராட்டுவான்; நாட்டுப் ப்டலத்திலே சரயு நதியைப்பாடு கின்றவன், "சரயு என்பது தாய் முலை அன்னது'' என்று போற்றுவான்; தசரதனது அரசியலைப் பேசவந்தவன் "தாய் ஒக்கும் அன்பின்" என்று பேசுவான். இவ்வாறே, காவியம் முழுதும் தாய்மைவளத்தைப் பிழிந்து கொடுக்கிறான் கம்பன்.

தாயர் வளத்தைப் பேசச் சொன்னால் தாய்மை வளத்தைப் பேசுகின்றானே! என்று நீங்கள் நினைக்கலாம். தாயர் வளத்திற்குத் தாய்மை வளந்தானே அடிப்படை! அதனாலே பேசினேன்.

இனி, தாயர் வளத்தைக் காட்டுகிறேன் :—

ஒரு பெண்ணின் மனைவளத்தை, மணாளனைக் கொண்டு மதிப்பிடவேண்டும். தாயர் வளத்தை மக்கள் வளத்தைக் கொண்டு மதிப்பிடவேண்டும். தசரத குமாரர்கள் நால்வர். நால்வரைப் பெற்ற தாயர் மூவர். மூவரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், நால்வரைக்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

அறம்செய் காவற்கு அயோத்தியுள் தோன்றிய இராமன், திருமாலின் அவதாரம். அந்தத் திருமாலைப் பெற்ற திருவயிறு கோசலையின் மணிவயிறு.

"மண்வயிற்றில் அடக்கிய மாயனைத்
தன்வயிற்றில் அடக்கும் தவத்தினாள்" கோசலை.

சேண் உயர் தருமத்தின் தேவு, செம்மையின் ஆணி, தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும் பள்ளம் எனத் தகைய பரதனைப் பயந்தவள் கேகயர்கோன் மகள் கைகேயி.

இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்ன பிரியாத தம்பியாகிய இலக்குவனையும், "யானும் இவ்வரசாள்வென்? என்னே இவ் அரசாட்சி இனிதே அம்மா!" என்று சொன்ன பேசாத தம்பி சத்துருக்கனையும் பெற்றவள், அறமே உருவான இளையாள் சுமித்திரை.

எங்கள் ஊர்க் கவிஞன், புதுச்சேரிக் கவிஞன், புரட்சிக் கவிஞன், பாவேந்தன் பாரதிதாசன் பாடினான்

"கல்லாத பெண்கள் களர் நிலம்; அந்நிலத்தில்
புல்விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைவதில்லை"

என்று.

பொருந்து செல்வமும் கல்வியும் பூத்த கோசல நாட்டுத் தாயரின் வயிறுகளிலே நல்ல பிள்ளைகள் பிறப்பார்களேயன்றிப் புல்லர்களா பிறப்பார்கள்?

"தாயைப்போலப் பிள்ளை'' என்பது பழமொழி.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்''

என்பது வள்ளுவர் வாக்கு

நல்ல வீணையிலேதான் நல்ல நாதம் பிறக்கும்
நல்ல மண்ணிலேதான் நல்ல பயிர் விளையும்
நல்ல தாயரின் வயிற்றிலேதான் நல்ல பிள்ளைகள்பிறப்பார்கள்.

''தெவ் அடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறும் அறம திறம்பலர்''

என்று கைகேயியின் கூற்ருகப் பிள்ளைகளைப் போற்றுகிருன் கம்பன். அறம் திறம்பாத பிள்ளைகளைப் பெற்ற தாயர்கள் வளமுள்ளவர்களாகத் தானே இருக்கமுடியும்! நல்லபிள்ளைகள் நால்வரைப் பெற்ற தாயர் மூவரும் நல்லவர்களே. அவர்களை வாழ்த்தி வணங்குவோம்.

உலகில் எந்தத்தாய்க்கும் தான்பெற்ற பிள்ளைமீது பாசம் இருப்பது இயற்கை. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது பழமொழி. இருப்பினும் மூன்று தாயரும் தன் பிள்ளையை மட்டும் பிள்ளை என்று கருதாமல், மாற்ருளின் பிள்ளைகளையும் பிள்ளையாக மதிக்கும் மனப்பக்குவம் பெற்று இருந்தார்கள்.

இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்றதும் கோசலையின் உள்ளம் குளிர்ந்தது; குழைந்தது; தழைத்தது.

குழைக்கின்ற கவரியோடும் கொற்றவெண் குடையினேடும், மழைக்குஉறம் அனைய இராமன் மௌலி சூடிக்கொண்டு வருவான் என்று தழைக்கின்ற உள்ளத்தோடு கோசலை காத்துக்கொண்டிருக்கிருள். அப்போது,

குழைக்கின்ற கவரியின்றி, கொற்றவெண்குடையுமின்றி,
இழைக்கின்ற வீதிமுன் செல்ல, தருமம்பின் இரங்கி ஏக,
மழைக்குன்றம் அனையான் மௌவி கலித்தனன் வரும் வரும் என்று
தழைக்கின்ற உள்ளத்தன்னாள் முன் ஒரு தமியன் வந்தான்

தனியனாக வந்த இராமனைப் பார்த்து, "முடி சூடுதற்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டதா மகனே! என்று கேட்கிறாள் கோசலை.

"மங்கை அம்மொழி கூறலும், மானவன்
செங்கை கூப்பிநின் காதல் திருமகன்,
பங்கமில் குணத்து எம்பி, பரதனே
துங்கமா முடி சூடுகின்றான் என்றான்"

இராமன் கூறுவதிலிருந்து, பங்கமில் குணத்துப் பரதன், கோசலையின் காதல் திருமகனாக விளங்கினான் என்பது விளங்கும்.

கோசலையும்,

மூத்தவன் இருக்க இளையவன் முடி சூடுவது முறையாகாது என்ற மரபு நோக்கி

"முறைமைன்று என்பது ஒன்று உண்டு; மும்மையின் நிறை குணத்தவன், நின்னினும் நல்லனால், குறைவிலன் எனக் கூறினாள்; நால்வர்க்கும் மறுஇல் அன்பில் வேற்றுமை மாற்றினாள்". தன்பிள்ளைக்கும் மாற்றாள் பிள்ளைக்கும் வேற்றுமை காட்டவேண்டி இருக்கும் என்பதை மாற்றிச் சமமாக அன்பு செலுத்தினாள் கோசலை.

பரதனைப் போற்றும் கோசலையின் உள்ளத்தை காப்பியத்தின் முதலிலே மட்டுமன்றி முடிவிலேயும் காணுகிறோம்.

இராமன் வருவதாகச் சொல்லி சென்ற பதினான்காம் ஆண்டு எல்லையின் இறுதியில், பரதன் தீவளர்த்து அதிலே குளிப்பதற்காக அழுத கண்ணும் தொழுத கையுமாகச் சுற்றி வருகின்றான். தூரத்தில் தலைவிரி கோலமாகக் கூந்தல் அவிழ்ந்து வீழ்ந்து அப்படியும் இப்படியும் அலைமோதத் தள்ளாடித் தள்ளாடி ஒரு பெண்ணுருவம் தன்னைநோக்கி ஓடி வருவதைப் பார்க்கிறான். அந்த உருவம் நெருங்க நெருங்க, தன்தாய் கோசலைதான் ஓடிவருகிறாள் என்று அறிந்து திடுக்கிட்டான். கண்ணீர் சொரிந்து ஓடிவரும் தாயின் காலில் பரிவோடு விழுந்தான் பரதன். அவள் புகுந்து பற்றிக்கொண்டாள்.

"விரி அமைத்த நெடுவேணி புறத்து அசைந்து
வீழ்ந்து ஓசிய மேனி தள்ள
எரி அமைத்த மயானத்தை எய்துகின்ற
காதலனை இடையே வந்து,
சொரிவு அமைப்பது அரிதாய மழைக்கண்ணாள்
தொடருதலும் துணுக்கம் எய்தா
பரிவு அமைத்த திருமனத்தான் அடிதொழுதான்
அவள்புகுந்து பற்றிக் கொண்டாள்".

பரதனைப் பற்றிக் கொண்டு கோசலை பேசுகிறாள்.

"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக்கு அருகாவரோ?
புண்ணியம் எனும் நின் உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?"

இங்கே, கோசலையின் தாய்மைப் பாசம், மாற்றாள் மகனாகிய பரதனிடத்து எப்படித் தாவிப்பாய்கிறது என்பதை அறிகிறோம்.

கைகேயியும் தாய்ப்பாசத்தில் கோசலைக்குக் கொஞ்சமும் குறைந்தவ ளல்லள்.

உறங்குகின்ற கைகேயியைக் கொடுமனக்கூனி வந்து எழுப்புகிருள்; இடர்வருவது தெரியாமல் நிம்மதியாக உறங்குகின்ருயே என்ருள் கூனி. அப்போது கைகேயி

தெவ் அடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறும் அறம் திறம்பலர்
எவ்இடர் எனக்கு வந்து அடுப்பது ஈங்கு என்ருள்".

"என் சிறுவர்" என்பதிலிருந்து நான்கு சிறுவர் மீதும் சமமாக அன்பு செலுத்திஞள் என்பது புலப்படும்.

அடி கைகேயி! கோசலைக்கு வாழ்வு வந்து விட்டதடி! என்கிருள் கூனி.

"மன்னர் மன்னனேல் கணவன்; மைந்தனேல்
பன்னரும் பெரும் புகழ்ப் பரதன்; பார்தனில்
என் இனிமேல் அவட்கு எய்தும் வாழ்வு!'' என்ருள்.

பரதனைக் கோசலையின் மகன் என்று சொல்வதிலே பெருமையடைகிருள் கைகேயி.

கைகேயி! கோசலைக்கு என்ன வாழ்வு வரப்போகிறது என்ருகேட்கிருய்? நாளை காலை இராமன் முடிசூடப் போகிருன் என்ருள் கூனி.

"மாற்றம் அஃது உரைசெய மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அன்பும் ஒத்தவால்
வேற்றுமை உற்றிலள்; வீரர் வீரன்புக்கு
ஏற்றவள் இதயத்து இருக்கவே கொலாம்?"

இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று கேட்டதும், பெற்ற தாயான கோசலையின் உள்ளத்தை ஒத்திருந்தது, வளர்த்த தாயான கைகேயியின் உள்ளம். கோசலையைப் பற்றிக் கூறும்போது கம்பன், "வேற்றுமை மாற்றிஞள்"

என்கிறன். கைகேயியைப் பற்றிக் கூறும்போதோ "வேற்றுமை உற்றிலள்" என்கிறன். கோசலையின் உள்ளத்தில் வேற்றுமைக் குரிய அறிகுறி இருந்து அதனை மாற்றினள் என்று பொருள் படுகிறது. கைகேயியின் உள்ளத்திலோ, வேற்றுமைக்குரிய அறிகுறியே இல்லை என்று பொருள்படுகிறது. எனவே தாய்ப்பாசத்திலே கோசலைக்குக் கொஞ்சமும் குறைந்த வளல்லள் கைகேயி என்று நம்பலாம்.

கைகேயிக்கு இராமன்மீது எல்லை கடந்த பாசம் உண்டு என்று தசரதனுக்கும் தெரியும். அதனலேதான், வரம் கேட்ட கைகேயிடம் "வள்ளல் இராமன் உன்மைந்தன் ஆணை" என்று சத்தியம் செய்கிறன்.

நாகமெனும் கொடியவளை; தன்நேரில்லாத் தீயவளை தீயவை யாவையினும் சிறந்த தீயவளை; இரக்கம் இல்லாமல் இராமனைக் காட்டுக்கு அனுப்பியவளை; தாய்ப்பாசம் உள்ளவள் என்று கொள்வது தவறு என்று கருதலாம்.

பின்னப்பட்ட பிரம்பு நாற்காலியின் முன்புறம் உள்ள பொலிவுக்குக் காரணம், பின்புறமுள்ள முண்டு முடிச்சுகளே என்று உணர்தல் வேண்டும். அதுபோல், இராமனுடைய இன்றைய புகழுக்குக் காரணம் கைகேயியின் இரக்கமின்மையே என்றும் உணர்தல் வேண்டும்.

"அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்,
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மான்;
இரக்கம் இன்மையன்றே, இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே''

கைகேயி மனம் மாறவில்லையென்றல், அரக்கர்கள் அழிந்திருப் பார்களா? அறம் வாழ்ந்திருக்குமா? என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இராமனுடைய அவதார நோக்கம் முடியவேண்டும் என்பதற்காக எத்தனையோ பழிப்புக்களையும், இழிப்புக்களையும் ஏற்றுக்கொண்டு கல்லாகி நிற்கிருள் கைகேயி. பெற்ற மகன் பரதன், ''தாயா நீ! இல்லை, நோய் நீ! இல்லை இல்லை, நீ ஒரு பேய்'' என்று நேருக்குநேர் ஏசுகிருன். கங்கையின் ஓடத்தில் செல்லும்போது, ''படர்எலாம் படைத்தாள், பழிவளர்க்கும் செவிலி, பாழ்த்தபாவி, குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப்பாரம் குறைந்து தேய இடரிலா முகத்தாள்; கழற்கால் மாயன் நெடுமையால் அன்று அளந்த உலகு அனைத்தும் தன்மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாள்' என்று கூசாமல் ஏசுகிருன் வேட்டுவன் முன்னிலையில்.

தன்னைக்கொண்ட கணவன் தசரதனும், நாகூசாமல் நேருக்குநேர் ஏசுகிருன். மேலும், வசிட்ட முனிவனிடம் ''சொன்னேன் முனிவா! இவள் என்தாரம் அல்லள் துறந்தேன்'' என்றுகூறி கைகேயியை வெறுத்து விடுகிருன். கைகேயியோ தான்வளர்த்த மகனுகிய இராமனுடைய அவதார நோக்கம் முடியவேண்டும் என்பதற்காகக் கணவனை இழக்கவும் துணிந்து நிற்கிருள்.

மெழுகுவர்த்தி தன்னைக்கரைத்துக்கொண்டு உலகத்துக்கு ஒளி கொடுப்பது போல, கைகேயி இழிப்புக்களையும், பழிப்புக்களையும் தான் ஏற்றுக்கொண்டு இராமனுக்குப் புகழ்சேர்த்துக் கொடுக்கிருள். சகிப்புத் தன்மையின் இருப்பிடமாக, தியாகத்தின் பிறப்பிடமாகத் திகழும் கைகேயின் தாய்மைச் சிறப்பை நன்கு உணர்ந்தவன் இராமன். அதனுலேதான், மீட்சிப் படலத்திலே ஆவிஉருவில் வந்த தன் தந்தையிடத்திலே,

''தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக எனத் தாழ்ந்தான்''.

இதனைக்கண்டு, உலகத்து உயிர்களெல்லாம் வாய்திறந்து ஆர்த்து வாழ்த்தின, என்ருல் நாம் வாழ்த்தாமல் இருக்க முடியுமா?

அடுத்து, இளையாளாகிய சுமித்திரை தாய்மை வளத்திலே கோசலை கைகேயி ஆகிய இருவருக்கும் இளையாளாக விளங்குகிறாள். கோசலையும் கைகேயியும் மக்கள் மாற்று செய்து கொண்டு வளர்க்கிறார்கள். சுமித்திரையோ, தான் பெற்ற இரண்டு பிள்ளைகளையும், இரண்டு சக்களத்திகளின் பிள்ளைகளுக்கும் துணையாக்கித் தான் ஒரு தோழியைப் போன்றே காலம் கழிக்கிறாள்.

இராமன் காடுசெல்வதை அறிந்த சுமித்திரை புண்பட்ட நெஞ்சினளாய்ப் புரண்டு அழுதாள். இராமனும், இலக்குவனும் அவளுக்கு இரண்டுகண்கள்.

சுமித்திரை இலக்குவனை நோக்கிச் சொல்லுகிறாள் :-

"மகனே! உன்னால் ஆகாதது ஒன்றுமில்லை; இனி இராமன் வாழும் காடுதான் உனக்கு அயோத்தி; இராமன் தான் உனக்கு அரசன்; சீதைதான் உனக்குத் தாய்; நீ இங்கு நிற்பதும் தவறு; ஆகையால் உடனே புறப்பட்டு அவர்களுடன் போ!" என்று கட்டளையிடுகிறாள்.

"பின்னும் பகர்வாள், மகனே! இவன்பின் செல்! தம்பி
என்னும் படியன்று; அடியாரின் ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அது அன்றேல்
முன்னம் முடி! என்றனள் வார்விழி சோர நின்றாள்.

இவ்வாறு, சுமித்திரை கண்ணீர் சொரிந்து நின்று, சொன்ன சொற்கள் அற்புதமான தாய் அன்பை நமக்குக் காட்டி நிற்கின்றன.

இத்தகைய தாய்மை வளம் அயோத்தி அரண்மனையில் மட்டும் அடங்கிக்கிடக்கவில்லை. நகரம் முழுவதும் நடம் புரிந்தது. இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று கேள்விப் பட்டதும், நகரத்து மாதர்கள் இராமனை ஈன்ற கோசலையை

போன்று மகிழ்ந்தார்களாம். தாய்வளம் நகரத்திலே மட்டும் நடப்புரியவில்லை; கோசலநாடு முழுதும் தாய்வளம் தவழ்ந்து விளையாடியது. உயர்திணை உயிர்களிடத்தில் மட்டுமின்றி அஃறிணை உயிர்களிடத்திலேயும் தாயர்வளம் சிறந்திருந்தது.

தன் கன்றுக்கு ஊட்டவேண்டிய பாலை, எருமை மாடுகள், வயலில் வளரும் சாலி நெல்லுக்கு ஊட்டி வளர்க்கின்றனவாம்.

"ஈர நீர்ப் படிந்து இந்நிலத் தேசில
கார்கள் என்ன வரும்கரு மேதிகள்
ஊரில் உள்ள கன்று உள்ளிட மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே"

சரயுநதி பாய்ந்து சாலி நெல் விளையவேண்டும். சாலி நெல்லுக்குத் தாயாக சரயுநதி இருக்க, எருமைகளும் நெல்லுக்குப் பாலூட்டி வளர்க்கின்றனவாம். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது கோசலத்தின் கொள்கையாக விளங்கிற்று. இதனால் கோசல நாடுமுழுதும் தாய்மை வளம் குடிகொண்டிருந்தது என்பதை அறிகிறோம்.

கம்பன் காவியத்தில் தாயர்வளம் கோசல நாட்டோடு அடங்கிவிடவில்லை. நாடுகடந்து காடுவரையில் கமழ்ந்தது.

காட்டின் இடையிலே ஓடிக்கொண்டிருக்கும் கங்கையிலே ஓடம் ஓடிக்கொண்டிருக்கிறது. கோசலை, கைகேயி, சுமித்திரை மூவரும் அமர்ந்திருக்கின்றனர். வேட்டுவத் தலைவன் குகனுக்குப் பரதன் தன் தாயரை அறிமுகப் படுத்துகிறான். கோசலையை அறிமுகப் படுத்தும் காட்சி உள்ளத்தை உருக்கும் காட்சியாகும்.

"சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார் குரிசில்! இவர்யார்? என்று
குகன்வினவ, வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி, மூன்றுலகும் ஈன்றானை
முன் ஈன் றானைப்
பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான்பிறத்தலால்
துறந்த பெரியாள் என்றான்."

மூன்று உலகங்களையும் படைத்தவன் பிரமன். பிரமனைப் படைத்தவன் திருமால். திருமாலின் அவதாரம் இராமன். அந்த இராமனைப் பிள்ளையாகப் பெற்றதனாலே பெருஞ் செல்வம் பெற்றவள் கோசலை. பரதன் என்ற பாவிநான் ஒருவன் பிறந்த காரணத்தினாலே அத்தனை செல்வங்களையும் இழந்த பெரியவள் இவள், என்று அறிமுகப்படுத்துகிறான் பரதன்.

"என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந்து அழுவானை
இவன்யார்? என்று
கன்றுபிரி காராவின் துயருடைய கொடி வினவ,
கழற்கால் மைந்தன்,
இன்றுணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
எனக்கும் மூத்தோன் [இளையவற்கும்
குன்றனைய திருநெடுந்தோள் குகன் என்பான் இந்நின்ற
குரிசில் என்றான்"

காட்டிலே வாழ்கின்ற நாகரிகமற்ற ஒருவேடனை, "இவன் இராமனுக்குத் தம்பி என்றும், இலக்குவனுக்கும், சத்துருக்கனுக்கும், எனக்கும் மூத்தவன் என்றும் பரதன் கூறியதும், கோசலையின் தாய்மைப் பண்பு குகனிடம் தாவுகிறது. உடனே கோசலை வாழ்த்துகிறாள் :-

"நைவிர் அலிர் மைந்நீர்! நாடுதுறந்து காடுநோக்கி மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றும் அன்றே. கைவீரக் களிறு அனைய காளை இவன் தன்னோடும் கலந்து நீவிர் ஐவிரும் ஒருவிராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர்" என்றாள். கோசலைத்தாய் உள்ளம் குழைந்து வாழ்த்திய வாழ்த்து, கங்கைக்கரையில் குகன் என்ற வேட்டுவனையும், கிட்கிந்தையில் சுக்கிரீவன் என்ற வானரத் தலைவனையும், இலங்கையில் வீடணன் என்ற அரக்கனையும் தன் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளும்படி இராமனுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்த தசரதனை ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையாக்கிப் புதல்வரால் பொலியச் செய்தது. அரச மகனாயிருந்தாலும், வேட்டுவ மகனாயிருந்தாலும், வானர மகனாயிருந்தாலும், அரக்க மகனாயிருந்தாலும், அத்தனை பேரையும் வேற்றுமையின்றித் தழுவிக்கொள்ளும் ஒருமைப்பாட்டு உணர்வு கொண்டு தாயர் வளம் தழைத்திருந்ததைக் கம்பன் காவியம் நமக்குக் காட்டுகின்றது.

இத்தகைய ஒருமைப் பாட்டு உணர்வோடு கூடிய தாய்மைப் பண்பு, கோசலநாட்டு மண்ணுக்கும் இருந்தது என்று நாட்டுப் படலத்திலேயே நாட்டிக் காட்டுகிறான் கம்பன்.

கோசலநாட்டு வயல் வெளியில் வேலைசெய்யும் பெண்களிடத்தில் நடைபயிலும் அன்னப் பறவை, தன்குஞ்சுகளை தாமரை மலராகிய தொட்டிலில் வைத்து வளர்க்கிறது. மலர்த் தொட்டிலில் வளர்கின்ற அன்னக் குஞ்சுகள், "குவா குவா" என்று கூவித் தன் தாயை அழைக்கின்றன. அங்கே சேற்றுக் காலோடு மேய்ந்து கொண்டிருந்த மடி கனத்த எருமை மாடு, அன்னக் குஞ்சுகளின் அழைப்பு ஒலியைக் கேட்டதும், கட்டுத்தறியில் உள்ள தன் கன்றினை

459

நினைத்து அம்மா" என்று கனைக்கிறது கனைத்த கனைப்பிலே கனத்தமடியின் காம்புகளிலிருந்து "சொர்ர்ர்" என்று பால் சொரிகின்றது. சொரிந்த பால் தாமரை மலரின் இதழ்க் கிண்ணங்களிலே தேங்குகின்றன. தேங்கிய பாலை அன்னக் குஞ்சுகள் பருகிப் பசியாறுகின்றன உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? பசியாறிய அன்னக் குஞ்சுகள் ஆனந்தமாக உறங்குகின்றன. உறங்குகின்ற குஞ்சுகளுக்குப் பக்கத்திலே உள்ள பச்சைத் தவளைகள் "லாலா லாலா" என்று தாலாட்டுகின்றன. இந்த அற்புமான காட்சியைக் கண்டு நாம் அனைவரும் "ஆஹா ஹா" என்று ஆனந்தப்படுகிறோம்.

"சேல் உண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை,
கால் உண்ட சேற்றுமேதி கன்று உள்ளி நனைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயில, பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை"

கோசல நாட்டு மண்ணில், ஓரறிவுபடைத்த தாமரை முதல் ஐந்தறிவுபடைத்த எருமை மாடுவரை உள்ள உயிரினங்கள் அனைத்தும் தாய்மை நலத்தைப் பரிமாறிக் கொள்ளும் தகைமையைக் காட்டி, கங்கைக் கரையில் இனங் கடந்து எல்லை கடந்து பாயும் தாயர் வளத்துக்கு அடிப்படை அமைத்து விடுகிறான் கம்பன்.

வயல் வெளிகளிலெல்லாம் தாய்மை நலத்தைக் காட்டுகின்ற கம்பன் வனத்தில் வாழும் வானர மகளிரிடத்தும் தாயர்வளத்தைக் காட்டத் தவறவில்லை.

வாலி வதை முடிந்த பிறகு, கிட்கிந்தையின் அரசை ஏற்றுக் கொண்ட சுக்கிரீவன், சீதையைத் தேடுதற்குத் தன்பரிவாரங்களோடு கார் காலம் கழித்து வருவதாகச் சொல்லிச் சென்றவன், கார் காலம் கழித்தும் வரவில்லை.

இதனுல் சினங்கொண்ட இலக்குவன், கிட்கிந்தையின் மீது சீறிவருகிருன். இலக்குவனுடைய சீற்றத்தைத் தணிப்பதற்காக, அனுமனுடைய ஆலோசனைப்படி, வாலியின் மனைவி தாரை வானரப் பெண்களுடன் வாயிலில் வந்து நிற்கிருள். பெண்கள் கூட்டத்தைக் கண்ட இலக்குவன், தாமரை வதனம் சாய்த்துத் தனுநெடும் தரையில் ஊன்றி, மாமியர் கூட்டத்தில் வந்த மருமகனைப் போன்று நாணிக்கோணி தலைகவிழ்ந்து நிற்கிருன். அப்போது வேல்விழித் தாரை பேசுகிருள் :-

இளையபெருமானே! உன்னுடை பாதம் படுவதற்கு இந்தக் கிட்கிந்தை என்ன புண்ணியம் செய்ததோ! இமைப் போதும் இராமனைவிட்டுப் பிரியாத நீ, தனித்து வருவதற்கு உரிய காரணம் என்ன? என்று கேட்டாள் தாரை.

வேய்ங்குழல், விளரியாழ், வீணை இவையனைத்தும் நாணும் படியான இசையினும் இனிய சொல் இலக்குவன் காதில் விழுந்ததும், யார் பேசுவது என்று தலைநிமிர்ந்து பார்த்தான் அவ்வளவுதான்! பகலிலே தோன்றிய பௌர்ணமிச் சந்திரன் போன்ற ஒலி மங்கிய தாரையின் முகத்தைக் கண்டதும் இலக்குவனின் சீற்றம் தணிந்து விட்டது; கருணைபிறந்து விட்டது. இப்போது, இளையபெருமானின் உடம்புதான் கிட்கிந்தையில் இருக்கின்றதே தவிர, உள்ளம் அயோத்திக்குப் பறந்து விட்டது. அங்கே, தன் தந்தை தசரதனை இழந்து விதவைக் கோலத்தில் விளங்கும் தன் தாயாரை நினைந்து நினைந்து வேதனைப் படுகிருன் இலக்குவன். "ஆர்கொலோ உரை செய்தார்? என்று அருள்வர சீற்றம் அஃக. பார்குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த படிவம் போலும் ஏர்குலாம் முகத்தினுளை இறைமுகம் எடுத்து நோக்கித் தார்குலாம் அலங்கல் மார்பன், தாயாரை நினைந்து நைந்தான்.

தாரையின் தோற்றம் அயோத்தித் தாயரை நினைவு படுத்தியது தாரை எப்படியிருக்கிருள்? மங்கலநாண் இல்லை. நவரத்தின மாலைகள் இல்லை; தேன் துளிர்க்கும் மலர் மாலை இல்லை; மணம் வீசும் குங்குமம் சந்தனம் பூசாத பணைத்த மார்பைக் கழுத்தோடு மறையப் போர்த்தி யிருக்கிருள். பட்டை உதிர்ந்த பாக்கு மரத்தின் வடுப் போன்று மடிப்புள்ள மணிக் கழுத்து வெறுமனே விளங்கு வதைக் கண்டு கண்களில் நீர் அரும்பிநின்று வேதனைப் பட்டான் இலக்குவன். "மங்கல அணியை நீக்கி, மணி அணி துறந்து, வாசக் கொங்கலர் கோதை மாற்றி, குங்குமம் சாந்தம் கொட்டப் பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நின்ருன்''. அங்கே அயோத்தியில் இப்படித்தானே என்னுடைய அன்னையர் இருப்பார்கள் என்ற நினைவினுல் அசைவற்று நெடுநேரம் நின்றுவிட்டான் இலக்குவன்.

"இனையர் ஆம் என்னை ஈன்ற இருவரும் என்ன வந்த நினைவினுல் அயர்ப்புச் சென்ற நெஞ்சினன் நெடிது நின்ருன்" தாரையின் கைம்மைத்தவக்கோலம் இலக்குவனை அசைவற்று நிறுத்தி விடுகிறது.

ஒரு மங்கைக்கு கணவன் இறந்ததும் அவளுடைய மனைவளமும் இறந்து விடுகிறது. மனைவளம் மடிந்து போனுலும் மக்கள் வளம் பெறவேண்டும் என்பதற்காக, வேதனைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு, பொறுமையின் சின்னமாகக் கைம்மைத் தவம் கிடக்கும் வளத்தை தாயர் வளத்தைத் தாரையின் வாயிலாகக் காட்டுகிருன் கம்பன்.

இரக்கத்தின் உருவமாகத்திகழும் தாயர் வளத்தை, இரக்கம் என்னும் ஒரு பொருளில்லா அரக்கர் குலத் தாய்மாரிடத்தும் காட்டுகிருன் கம்பன்.

இராவணன் மகன் அதிகாயன். அதிகாயனுக்குத் தாய் தானமாலே. அதிகாயன் கட்டிளங்காளை; வீராதி வீரன். அதிகாயன் போர்க்களத்திலே இலக்குவன் அம்புக்கு இரையானுன. அதிகாயன் இறந்த செய்தி இலங்கைக்கு எட்டுகிறது. இராவணன் செவிகளிலும் செய்தி ஏறிற்று. இராவணன் அதிகாயனை நினைத்து நினைத்து அழுகிருன்; கோபத்தால் குமுறுகிருன்; மானத்தால் புழுங்கி நைகிருன் சிலைபோன்று அசைவற்று நின்றுவிடுகிருன்.

மைந்தன் இறந்த செய்தியறிந்த தானமாலே, மலைச் சிகரத்திலே இடிவிழுந்தது போலப் படீர் படீர் என்று மார்பிலே அடித்துக்கொண்டு, ஓடி வந்து இராவணன் காலில் விழுந்தாள்; மலைப்பாம்பு நெளிவது போன்று நெளிந்தாள்; மலைக்குகை போன்ற வாயைத்திறந்து அழுவது போன்று அலறினுள். தன் கன்றுக் குட்டியை இழந்த தாய்ப் பசுபோல பதறினுள். தன்னுடைய வாழ்க்கையில் பிறர் அழுவதைக் கண்டும் அறியாத தானமாலே பின்வருமாறு புலம்பலுற்ருள்:

"ஐயா! இராம லட்சுமணர்களின் வலிமையை ஒடுக்க இப்போது உன்ஞல் முடியவில்லையே? முதல் நாள் போரில் வீரமும் களத்தே போட்டு வெறுங் கையோடு இலங்கையில் புகுந்தாயே! இன்னும் அந்த வீரத்தை மீட்க வில்லையா? திக்கின் மாஎலாம் தொலைத்து வெள்ளிமலை எடுத்து உலகம் தாங்கும் தோள்களல்லவா உன்னுடைய தோள்கள்! அந்தத் தோளாற்றல் மெலிந்து போயிற்ரு? நல்லவர்கள் சொன்னவற்றையெல்லாம் கேட்டாயே! உணரவில்லையா? நான் சொல்வதையாவது கேட்கமாட்டாயா? காட்ட மாட்டாயா? என்னுடைய கண்மணி அதிகாயனைக் காட்டமாட்டாயா?

"மாட்டாயோ இக்காலம் வல்லோர் வலிதீர்க்க,
மீட்டாயோ வீரம்? மெலிந்தாயே? தோளாற்றல்
கேட்டாய் உணர்ந்திலேயோ? என் உரையும் கேளாயோ?
காட்டாயோ என்றன் கண்மணியைக் காட்டாயோ?"

இந்திரனுக்கும் தோற்காத நல்ல மகனை ஈன்ருள் என்று அந்தரத்து வாழும் அமரர்களும் வாழ்த்தினர்களே! மந்தர மலை போன்ற தோளையுடைய என் மகனை, கையாலாகாத மனிதப் பிறவியின் அம்புக்கு இரையாக்கி விட்டேனே!
"இந்திரற்கும் தோலாத நன் மகனை ஈன்ருள் என்று அந்தரத்து வாழ்வாரும் ஏத்தும் அளியத்தேன், மந்தரத் தோள் என் மகனை மாட்டா மனிதன் தன் உந்து சிலைப் பகலிக்கு உண்ணக் கொடுத்தேனே!"

முன்பு, அனுமன் கையால் அக்ஷய குமாரன் இறந்தான் இன்று, இலக்குவன் கணையால் அதிகாயன் இறந்தான். மிக்க வலிமையுள்ள அரக்கர்கள் எல்லோரும் இறந்தார்கள். இன்னும் இந்திரசித்தன் ஒருவன் தான் எஞ்சியிருக்கிருன். திக்கு விசயம் திக்கு விசயம் என்று திரிவாயே! இனிமேல் திக்கு விசயம் எப்படிச் செய்வாய்?

"அக்கன் உலந்தான்; அதிகாயன் தானுலந்தான்; மிக்க திறத்துள்ளார் எல்லாரும் வீடினர்; மக்களினில் நின்றுள்ளான் மண்டோதரி மகனே. திக்கு விசயம் இனி ஒருக்கால் செய்யாயோ!"

நான் இவ்வளவு பேசியும் நீ வாயைத் திறக்காமல் இருக்கிருயே! ஏதையா சிந்தித்திருக்கிருய்! கணக்கின்றி இறந்து பட்ட அரக்க வீரர்களையெல்லாம் கூவையா! அறிவில்லாமல் காமவெறி பிடித்தவர்கள் யாராவது பிழைப்பார்களா? ஐயோ! சீதையால் இன்னும் என்ன என்ன கேடுகாலம் வருவதற்குக் காத்திருக்கிறதோ! "ஏதையா சிந்தித்து இருக்கிருய்! எண்ணிறந்த கோதை ஆர் வேல் அரக்கர் பட்டாரைக் கூவையா! பேதையாய் காமம் பிடித்தார் பிழைப்பாரோ? சீதை யால் இன்னும் வருவ சிலவேயோ!"

உன் தம்பி வீடணன் அறிவுடையவன்; அவன் சொன்ன அறுவுரையைக் கேட்கவில்லை. இளையவன் சொன்னுன் என்று எடுத்தெறிந்து விட்டாய். பெரிய மனிதனுகிய உன் பாட்டன்

மாலியவான் சொன்ன அறிவுரையையும் கேட்கவில்லை. அதன் விளைவு என்ன? முன்பு கும்பகர்ணனையும் கொல்வித்தாய்! இன்று என் கோமகன் அதிகாயனையும் இலக்குவன் அம்புக்கு இரையாக்கிவிட்டாய். நன்ருக அரசாட்சி செய்தாய் ஐயா! நன்ருக அரசாட்சி செய்தாய்!

"உம்பி உணர்வுடையான் உரைத்த உரைகேளாய்
நம்பி குலக்கிழவன் நாடு நலம் தேருய்
கும்பகருணனையும் கொய்வித்து என் கோமகனை
அம்புக்கு இரையாக்கி ஆண்டாய் அரசு ஐயா!"

கொண்ட கணவனை, அன்பே! அரசே! என்று அமுதூற அழைத்த தானமாலையின் வாய், இன்று பிள்ளைப் பாசத்தின் காரணமாக, அதிகாயன் இறந்துபட்ட மனக் கசப்பால், ஏதையா! கூவையா! ஆண்டாய் அரசையா! என்று வெறுத்துப் பேசுகிறது. ஒரு தாயிடத்தில் பதி பக்தியும் பிள்ளைப் பாசமும் போட்டியிடும்போது, பிள்ளைப் பாசம் முன்னேறுகிறது, பதி பக்தி பின்னடைகிறது. இதற்கு உதாரணம், தானமாலையின் புலம்பல், தானயாலையின் புலம்பலால், கொண்ட கணவனை விட பெற்ற பிள்ளையே பெரிதென மதிப்பது தாயர் உள்ளம் என்று அறிகிருேம்.

இராவணனுக்கு மகன் இந்திரசித்தன். இந்திரசித்தன் மண்டோதரி வயிற்றிலே பிறந்த மகன். இலங்கைமா நகரையே வீரமா நகராக்கியவன் இந்திரசித்தன். அவன் வீரருள் வீரன். இலக்குவன் கணையினுல் இந்திரசித்தன் தலை துண்டிக்கப் பட்டுப் போர்க்களத்தில் கிடக்கிருன். இராவணன் போர்க் களத்தில் இறந்துபட்ட இந்திரசித்தன் உடலைத் தாங்கிக் கொண்டு அரண்மனையில் நுழைகிருன். மகன் மாண்டான் என்ற செய்தி கேட்ட மண்டோதரி, ஐயோ என்று தலையின் மேல் சுமந்த கையளானுள். இருந்த இடத்தில் இருக்கவும் முடியவில்லை; எழுந்து விரைந்து ஓடவும் முடியவில்லை;

தணலினை மிதித்தவள் போல் தத்தளித்தாள். இந்த நிலைக்குக் காரணம் மகன் மீதுள்ள நேசத்தால் நிறைந்த நெஞ்சள்

" தலையின் மேல் சுமந்த கையள்
தழலின் மேல் மிதிக்கின்றாள் போல்
நிலையின் மேல் மிதிக்கும் தாளாள்
நேயத்தால் நிறைந்த நெஞ்சள் "

மண்டோதரி தத்தளித்துத் துடித்துச் சென்ற நிலைக்கு, தழலின் மேல் மிதிக்கும் நிலையை உவமையாகக் கையாண்டான். தத்தளித்துத் துடித்து ஓடியவள் மைந்தன் மேல் மருகி வீழ்ந்தாள், இப்படிச் சொல்வதால் கம்பனுடைய உள்ளத்தினவின் ஊறல், அடங்கவில்லை. மற்றொரு ஒப்பற்ற உவமையைக் கையாளுகிறான் கம்பன்.

உயர்ந்த மலை. உயர்ந்த மலையில் உயர்ந்த மரங்கள். உயர்ந்த மரத்தின் உச்சியில் பச்சைக்களாப மயில் ஒன்று ஆனந்தமாக அமர்ந்துகொண்டிருக்கிறது. அதன் அழகை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். இந்த அமைதியான சூழ்நிலையில் வேட்டுவன் குறிவைத்து எய்த கூரிய அம்பு மயிலின் மார்பிலே பாய்ந்துவிடுகிறது. மயிலுக்கு இருந்த இடத்தில் இருக்கவும் முடியவில்லை; எழுந்து பாய்ந்து பறக்கவும் முடியவில்லை; தன் இரண்டு இறக்கைகளையும் பட பட வென்று அடித்துக்கொண்டு துடியாய்த் துடித்துப் பதையாய்ப் பதைத்து அங்குமிங்கும் அலைமோதிப்பறந்து உடல் சோர்ந்து உயிர் சோர்ந்து பாறையின் மேல் விழுவது போல மண்டோதரி மைந்தன் மேல் மறுகி வீழ்ந்தாள்.

தலையின்மேல் சுமந்த கையள்;
தழலின்மேல் மிதிக்கின் றாள்போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளாள்;
நேயத்தால் நிறைந்த நெஞ்சள்;

கொலையின்மேல் குறித்த வேடன்
கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில்வீழ்ந் தென்ன
மைந்தன்மேல் மருகி வீழ்ந்தாள்.

வீழ்ந்தவள் மூச்சு பேச்சில்லாமல் கிடக்கிருள். உயிர் போய்விட்டதோ என்று ஐயப்படும்படி கிடக்கிருள். சிறிது சிறிதாக அயர்வு நீங்கி வாய்விட்டுப் புலம்பத் தொடங்கி விட்டாள்.

ஐயனே! அழகனே! அரும்பெறல் அமிழ்தே! தாமரை போன்ற உன்னுடைய முகத்தை இனிக் காணக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேனே!

வளர்பிறை போன்று வளர்கின்ற பருவத்திலே, உன்னுடைய வில்லாற்றலால் இந்திரனை வெல்லக் காணும் தவத்தைச் செய்த நான், இன்று உன்னுடைய தலையில்லாத உடம்பைக் காண என்ன பாவத்தைச் செய்தேனே? அந்தோ! நிலையில்லாத வாழ்வை நினைத்து நெகிழ்கின்றேனே!

"கலையினுல் திங்கள் என்ன வளர்கின்ற காலத்தே உன், சிலையினுல் அரியை வெல்லக் காண்பது ஓர் தவம் முன் செய் தேன், தலைஇலா ஆக்கை காண எத்தவம் செய்தேன்! அந்தோ! நிலையிலா வாழ்வை இன்னும் நினைவெனே, நினைவு இலாதேன்"

உன்னுடைய பாதச் சலங்கைகள் ஒலிக்கும்படியாகத் தவழ்கின்ற பருவத்திலே, இரண்டு சிங்கக் குட்டிகளைக் கட்டி இழுத்து வந்து, ஒன்றுக்கொன்று கோபம் மூட்டிவிட்டு, வீட்டின் முற்றத்திலே விளையாடினுயே! அந்த விளையாட்டை இனி எப்போது காண்பேனே? "தாள் அறிச்சதங்கை ஆர்ப்ப தவழ்கின்ற பருவந்தன்னில் கோள் அரி இரண்டு பற்றிக்

கொணர்ந்தனை; கொணர்ந்து கோபம் மூளுறப் பொருத்தி, மாடமுன்றிலில் முறையின் ஓடி மீளஅரு விளையாட்டு இன்னம் காண்பெனே, விதியிலாதேன் "

மகனே! நீ குழந்தையாக இருந்தபோது, மறப்புலி உரைத்தும் மதியம் காட்டியும் சோறு ஊட்டி வளர்த்தேனே! அப்போது நீ, " நிலா நிலா வா வா " என்று அழைத்தாயே! அழைத்ததும் அஞ்சி நடுநடுங்கி சந்திரன் உன் எதிரில் வந்து நின்றானே! அவனை அஞ்சாதே! என்று சொல்லி இரண்டு கைகளாலும் ஏந்திக்கொண்டு, உன் முகத்திலே களங்கம் இருக்கிறதே இது என்ன? என்று கேட்டாயே! அவன், அது " முயல் " என்று சொன்னானே! சொன்னதும் " முயலா! அது எனக்கு விளையாடவல்லவா வேண்டும் " என்று பற்றிக் கொண்டாயே! அந்தக் காட்சியை மீண்டும் காண விரும்பு கின்றேன். நீ எழுந்து வரமாட்டாயா? மகனே! எழுந்து வர மாட்டாயா?

" அம்புலி அம்ம வா என்று அழைத்தலும் அவிர் வெண் திங்கள் இம்பர் வந்தானை அஞ்சல்! என்று இரு கையின் ஏந்தி வம்புறு மறுவைப் பற்றி முயல் என வாங்கும் வண்ணம் எம் பெருங்களிறே! காண ஏசற்றேன் எழுந்திராயோ! "

" டில்லிக்கு ராசாவாக இருந்தாலும் தாய்க்குப் பிள்ளை " தானே! இலங்கையின் இணையற்ற வீரனாயிருந்தாலும் மண்டோதரிக்கு மகன்தானே இந்திரசிந்தன். அதனாலே தான் மண்டோதரியின் உள்ளத்துக்கு, மாண்டுகிடப்பது மாவீரன் என்று தோன்றவில்லை! தன் குழந்தை என்றே தோன்றுகிறது. அதனாலேதான், பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளை நினைத்து நினைத்து அழுகிறாள். தாயர் உள்ளம் குழந்தைகளை நினைத்து குழையக் கூடியது என்ற உண்மையை மெய்ப்பித்து விடுகிறாள் மண்டோதரி.

கம்பன், தன் படைத்த காவியத்தில் தாயர் வளத்தைப் பாடும்போதெல்லாம் தானே தாயாகி விடுகிருன். அவனை அம்மை என்று அழைப்பதா? அப்பன் என்று அழைப்பதா? அம்மையப்பன் அவன். அவனை தாய் என்று அழைப்பதா? தந்தை என்று அழைப்பதா? தாயும் ஆனவன் அவன்.

அன்னையாய் அந்தன் ஆகி அருளும் நல் ஆசானுகிப் பின்னும் எனை ஆண்டுகொண்ட பெருந்தெய்வம் தானேயாகி நின்றவன் அவன்.

கம்பா !

உன்னை உள்ள படி அறியேன்,
உலகை உள்ள திறமுள்ளேன்,
பின்னை அறியேன், முன் அறியேன்,
இடையும் அறியேன், பிறழாமல்
நின்னை வணங்கி, நீ வகுத்த
நெறியில் நிற்கும் அதுஅல்லால்
என்னை அடியேன் செயற்பால,
இன்பதுன்பம் இல்லானே!

வணக்கம்.





வள்ளுவர் அச்சகம், காரைக்குடி. போன்: 506